சி.சி எண். 136/2022 நாள்: 21.08.2024

அ.சா.3 அகல்யா

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் 11ம் வகுப்பு படித்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது எனக்கு தனிப்பட்ட போன் இல்லை. எனது வீட்டில் இருந்தது. 108 ஆம்புலன்ஸிற்கு கால் பண்ணுவது பற்றி தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். இடம் சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றைக்கும் 1வது எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றால் அதுப்பற்றி தெரியாது.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து எவ்வளவு நேரம் எனது அப்பா வரும்வரை வீட்டில் இருந்தோம் என்றால் எனக்கு தெரியவில்லை. மருத்துவமனைக்கு எனது அப்பா வந்து கூட்டி சென்றதாக சொன்னார்கள். நான் மயக்கம் அடைந்து விட்டேன். இடைப்பட்ட நேரத்தில் எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. நான் மருத்துவமனைக்கு வரும்போது 1வது எதிரி காயம்பட்டு சிகிச்சையில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்விரோதம் உள்ளது என்றும், அ.சா1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.